# சட்ட மன்றப் பேரவை விதி 110இன் கீழ் 25.2.2009 அன்று பொதுப்பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன் படித்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகச் சட்ட மன்றப் பேரவை விதி 110இன் கீழ் ஓர் அறிக்கையினை முன் வைக்கின்றேன்.

19.2.2009 அன்று சென்னை உயர் நீதி மன்ற வளாகத்தில் காவல் துறையினருக்கும் வழக்கறிஞர்களுக்கும் இடையே ஏற்பட்ட சட்டம் ஒழுங்கு பிரச்சினை காரணமாக இரு தரப்பினருக்கும் ஏற்பட்ட சேதங்கள் குறித்து கண்டறிவதற்காக ஓய்வு பெற்ற நீதியரசர் ஞானப் பிரகாசம் தலைமையில் தமிழக அரசின் சார்பில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. அதையொட்டி முதலமைச்சர் கலைஞர், அமைச்சர்கள் பொன்முடி, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், முன்னாள் அமைச்சர் டாக்டர் பூங்கோதை ஆகியோரை மருத்துவமனைகளுக்கு அனுப்பி காயமடைந்த இரு தரப்பினரையும் பார்த்து ஆறுதல் கூறி வரச் செய்ததின்பேரில், அவர்கள் அவ்வாறே பார்த்து வந்து முதலமைச்சரிடம் நிலைமைகளை விளக்கியதன் தொடர்ச்சியாக பின் வரும் அறிவிப்பினை முதலமைச்சர் கலைஞர் அவையிலே வைக்கச் சொல்லியிருக்கிறார்கள். அதன் விவரம் வருமாறு :-

நீதியரசர் ஞானப் பிரகாசம் குழுவின் அறிக்கை வருவதற்கு சில நாட்கள் ஆகும் என்பதால், இடைக்கால உடனடி நிவாரணமாக காயம்பட்டவர்களுக்கு தலா ஐந்தாயிரம் ரூபாய் மருத்துவச் செலவிற்காகவும், வாகனங்கள் சேதமடைந்தோருக்கு, அதே போல் அவற்றை பழுது பார்ப்பதற்காக அவரவர்களுக்கு ஏற்பட்ட இழப்பிற்கு ஏற்பவும் உதவித்

தொகை வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

---